# என்ன வித்தியாசம்!

# சிலுவைப்பாதை

அருட்செல்வி ஜோசப்பின் இலக்கியா CIC, இளையரசனேந்தல்,

பாளையங்கோட்டை மறைமாவட்டம்

## முன்னுரை

பாதைகள் பலவுண்டு. ஓவ்வொரு பாதையும் நம்மை ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்கின்றது. வளர்ந்து வரும் இக்காலத்தில் பாதைகளும் வளர்ச்சி கண்டுள்ளன. ஒரு வழிப் பாதையாக இருந்தவைகள் இரண்டு வழிப்பாதைகளாக, நான்கு வழிப்பாதைகளாகக் கூட வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கின்றன. எல்லாமே மக்களின் பயணங்கள் எளியவகையாகவும் நெரிசல் இல்லாமலும் சுகமானதாகவும் அமைய வேண்டும் என்பதற்காகவே.

ஆனால் மக்களின் வாழ்வுப் பயணங்கள் எளிமையானதாகவும், இனிமையானதாகவும், சுமையாகாமலும், சுகமானதாகவும் அமைய உருவான பாதைகள்! உதவுகின்ற பாதை நான்கு வழிப்பாதைகள் அல்ல. மீட்பின் பாதை குறுகலானது என இறைவார்த்தை சொல்லுகின்றது. மாறாக சிலுவைப்பாதைகள் 'வார்த்தைகளில் வேண்டுமானால் சிலுவை இருக்கலாம், வாழ்க்கையில் சிலுவை இருக்காது.'

ஏனெனில் இது மீட்பின் பாதை. மீட்பரின் பாதை.

நம் இதயத்தை சுத்தப்படுத்தும் பாதை. நம் வாழ்வைத் தூய்மைப்படுத்தும் பாதை.

ஓட்டு மொத்தத்தில் இது விடுதலையின் பாதை.

வெற்றியின் பாதை.

நமது வாழ்வு துன்ப துயரங்களில் துவண்டு போகாமலும், சோதனை வேதனைகளினால் வெந்து போகாமலும் என்றும் மலர்ந்து நமக்கும் மற்றவர்களுக்கும் மணம் வீச நமது வாழ்க்கைப் பாதை இயேசுவின் சிலுவைப்பாதையோடு இணைப்போம்.

வாழ்க்கைப் பயணத்தை தொடர்வோம்.

## முதல் நிலை

## இயேசு தீர்ப்பிடப்படுகின்றார்

கொதிக்கும் வெயிலையும் குடைப் பிடித்துச் சென்ற மனிதனையும் குடையையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தது மின் கம்பம். என்ன உலகம் என்று தனக்குள்ளே சலித்துக் கொண்டது. பெருமூச்சோடு மின்கம்பம் சொல்லியது.

'நிழல் கொடுக்கும் குடைக்குக் கிடைத்தது வெயில்' (2)

மக்களுக்கு ஆறுதல் கூறியவர்க்கு ஆற்றுப்படுத்தியவர்க்குக் கிடைத்தது மரண தீர்ப்பு. உண்மைக்கு சான்று பகர்வதே என் பணி. இதற்காகவே பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன் என்று உண்மைக்கு உழைத்த உத்தமர்க்கு கிடைத்தது மரணத் தீர்ப்பு. பிறரை குற்றவாளி எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்பொழுது தான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள் என்று வீரமுரசு கொட்டியவ வீரர் இயேசுவுக்குக் கிடைத்தது மரணத் தீர்ப்பு.

இது நேர்மைக்காக உண்மைக்காக போராடியதற்காக கிடைத்த தீர்ப்பு. ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்காக பரிந்து பேசியதற்காக அளிக்கப்பட்ட தீர்ப்பு. பாவிகளோடும் வரிதண்டுபவர்களோடும், சேர்ந்து உண்டதற்காகப் பெற்ற தீர்ப்பு.

இப்படிப்பட்ட தீர்ப்புகள் இயேசுவுக்கு மட்டுமல்ல, அவரைப் போன்று கொள்கைப் பிடிப்போடும் நீதியோடும் நேர்மையோடும் வாழ முற்படுகின்ற நமக்கும் கிடைக்கும் இந்த இலவசத் தீர்ப்பு.

**இயேசுவின் குரல்:**

- என் மகனே, மகளே, என்னைத் தீர்ப்பிட்ட அந்தச் சதிகார கொலைகார கும்பலைப் போல நீயும் பிறரைத் தீர்ப்பிடுவதில் தானே இன்பம் காண்கின்றாய்.
- நீ ஜோடிக்கின்ற பொய் வழக்குகள் மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்துவதில்லையா?
- சுய இன்பத்திற்காகப் பொய் செய்திகளைப் பரப்புவதனால் அடுத்தவர்களின் நற்பெயரை கெடுக்கின்றாய்.
- உன் பணம் அதிகாரம் இவற்றினால் பலருடைய கண்களில் கண்ணீர் சிந்த வைக்கின்றாய்.

*இவற்றையெல்லாம் நீ செய்யும் போது உனக்கும் என்னை தீர்ப்பிட்ட அந்த சதிகார கொடூரமான கும்பலுக்கும் என்ன வித்தியாசம்.*

**செபம்**

இயேசுவே! என் தீர்ப்புகளால் தினமும் மனித நேயத்தை மண்ணில் புதைக்கும் குற்றங்களுக்காக மனம் வருந்துகின்றேன். மன்னித்து ஏற்றருளும். ஆமென்.

## இரண்டாம் நிலை

## இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகின்றது

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், என்று அழைத்தவர்க்கு நாம் கொடுத்த மதிப்புமிக்க பரிசு என்ன தெரியுமா? தாங்க முடியாத சிலுவை. எங்கோ ஒருவர் சொல்லக் கேட்டேன் . . .

- இறைவன் அழகிய இயற்கையினை உருவாக்கி அதில் நிறைய மரங்களைப் படைத்தார். ஆனால் அவற்றிலிருந்து சிலுவையை உருவாக்கி இயேசுவின் மேல் சுமத்தினான் மனிதன்.
- இறைவன் செடி கொடிகள் முட்புதர்களை படைத்தார். ஆனால் மனிதன் அவற்றிலிருந்து முள்முடி செய்து இயேசுவின் தலைக்கு சூடினான்.
- இறைவன் உலோகங்களைப் படைத்தார். மனிதன் அவற்றிலிருந்து பெரிய ஆணியைச் செய்து இயேசுவை அறைந்தான்.

வெளிச்சத்திற்கு இருள் கொடுக்கும் தண்டனையைப் பார்த்தீர்களா?

இவ்வாறு உலகையும் இயற்கையையும், பரிசாக நமக்கு கொடுத்த இறைவனுக்கு மனிதன் கொடுத்த பரிசோ சுமைகள். பாரமான சிலுவை. நான் கேட்கின்றேன் வேறெதை கொடுக்க முடியும் மனிதனால்? நமக்கு நன்மை செய்தவர்களுக்கு நாம் கொடுக்க பழகியது தீமைதானே.

இயேசுக்கு மட்டும் என்ன விதிவிலக்கா?

நெருப்பிலே இடப்பட்ட பொன் போல இயேசு மிளிர்ந்து கொண்டிருக்கின்றார். ஏனெனில் சுமைகள் தான் வாழ்வை சுகமாக்குகின்றன என்பதை உணர்ந்தவர் இயேசு. இதற்காக எத்தனை முறை இயேசுவின் மீது சிலுவையை சுமத்த முடியும்?

**இயேசுவின் குரல்:**

- உன் வாழ்விற்கு ஏணிபடிகளாக இருந்து ஏற்றிவிட்டவர்களை எட்டி உதைக்கின்ற போது, என்மீது சிலுவையை சுமத்துகின்றாய் அல்லவா?
- காரியம் ஆகும் வரை காலைப் பிடித்து காரியம் நடந்த பின்னர் காலை வாரி விடும் போது என்மீது சிலுவையை சுமத்துகின்றாயே?
- உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணும் மனநிலையில் உதவியவர்களை உதாசீனப்படத்தி உதறும் போது என்மீது சிலுவையை சுமத்துகின்றாயே?

*இப்படியெல்லாம் நீ சிலுவையை சுமத்தும் போது எனக்குச் சிலுவையை சுமத்திய கூட்டத்திற்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்*

ஓரே குட்டையில் ஊறிய மட்டைகள் தானே.

**செபம்:** இயேசுவே, யாருக்கும் சுமைகளை கொடுக்காமல் சுமைகளை இறக்க கூடியவர்களாக வாழும் மனநிலையை தாரும். - ஆமென்

## மூன்றாம் நிலை

## இயேசு முதல் முறை விழுகின்றார்

விழுவது தோல்வியல்ல. பிறரை விழ வைப்பது தான் தோல்வி. வாழ்க்கையில் விழுந்தவர்கள் எல்லாம் மடிந்து போவதில்லை. விழுந்து எழுவதில் தான் ஓர் விடியல் இருக்கின்றது. சாய்ந்து வளைந்து கொடுத்து, நிமிர்ந்து நிற்பதில் தான் வாழ்க்கையின் நிர்பந்தம் புரிகின்றது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் ஒன்றும் பயன்படாது. முடிந்தால் தான் மிகுந்த பலன் கொடுக்கும்.

இந்த உலகத்திற்கு வாழ்வு கொடுக்க, மீட்பினை வழங்க வந்த இயேசு மண்ணில் விழ ஆரம்பித்து விட்டார். ஆவரின் உடல் சோர்ந்ததே தவிர உள்ளம் சோரவில்லை. கால்கள் தள்ளாடினதே தவிர, இலட்சியம் தள்ளாடவில்லை. எனவே மண்ணை முதல்முறையாக தொட்டுப் பார்க்கின்றார். பலன் கொடுக்க ஆரம்பித்து விட்டார்.

நமது வாழ்வில் தடைகள், கஷ்டங்கள், பிரச்சனைகள், வந்து விட்டால் தளர்ந்து போகின்றோம். தோல்விகள் தழுவி விட்டால் துவண்டு விடுகின்றோம். துணிவு இல்லாதவன் கையில் ஆயுதம் என்பது புல். துணிவு உள்ளவன் கையில் புல் என்பது ஆயுதம் என்பார்கள். நாம் பலன் கொடுக்க துணிவோடு எழுந்து நடக்க இயேசு நம்மை அழைக்கின்றார்.

**இயேசுவின் குரல்:**

- துன்ப துயரங்கள் தான் ஒரு மனிதனின் வாழ்வைத் தூய்மைப்படுத்துகின்றன என்பது உனக்குதம் தெரியாதா?
- கஷ்டங்கள் தான் ஒரு மனிதரை கரை சேர்க்கின்றன என்பதை கேள்விப்பட்டதில்லையா?
- சிலுவைகள் தான் ஒருவரை சிம்மாசனத்திற்கு இட்டுச் செல்கின்றன என்று எண்ணியதில்லையா?
- தளர்ந்து போகாதே. யார் உன்னைக் கைவிட்டாலும் நான் என்றும் உன்னோடு இருப்பேன். எழு. என்னோடு நட.

*எழ மறுத்து கோழையாகி நின்றால் உனக்கும், இயேசுவை கீழே விழச் செய்த கோழைகளுக்கும் என்ன வித்தியாசம்.*

**செபம்:**

இயேசுவே எப்பொழுதும் உம்மைப் போலவே எழுந்து, உம்மோடு நடக்கும் மனநிலையினை எனக்குத் தாரும்.

## நான்காம் நிலை

## மகனைத் தாய் சந்திக்கின்றார்

மனித வாழ்வில் சந்திப்புக்கள் பலவுண்டு. சில சந்திப்புக்கள் மகிழ்ச்சியைத் தரும். பல சந்திப்புக்கள் வருத்தங்களை தரும். சில சந்திப்புக்கள் உறவை வளர்க்கும். பலரின் சந்திப்புக்கள் வளர்த்த உறவை சிதைக்கும். சிலரின் சந்திப்புக்கள் வெட்டும். சில ஒட்டும். பெற்ற குழந்தையைப் பார்த்து சந்தித்து மகிழ்ச்சியடையாத தாயும் உண்டோ?

என் நண்பன் ஒருவன் அலைபேசியில் அனுப்பி வைத்த குறுந்தகவல் ஒன்று. நுண்பாகள் கடவுள் கொடுத்த கொடை. தாய் கொடையாக வந்த கண்கண்ட தெய்வம். மரியா இதற்கு விதிவிலக்கல்ல. இயேசுவைப் பெற்ற தாய் தானே அவர். இயேசுவுக்கு அன்னை மரியா கடவுள் தந்த கொடை.

கடவுள் கலங்குவதில்லை, ஏனெனில் ‘கலங்காதே’ என்று சொன்னவர் அவர்.

கடவுள் அஞ்சுவதில்லை, ஏனெனில் ‘அஞ்சாதே’ என்று மொழிந்தவர் அவர்.

அன்னையில் கண்கள் மடை திறந்தாலும், கலங்காது, அஞ்சாது, ஐயோ கிளியை வளர்த்து பூனையிடம் கொடுத்து விட்டேனே என்றும் புலம்பாது துணிவோடு எதிர் கொண்டு மகனை சந்திக்கின்றார்கள். மகனே நல்லாது தொடர்ந்து உன் லட்சியப் பயணத்தை நடத்து என்று பார்வையாலேயே ஊக்கம் கொடுக்கின்றார்கள்.

சும்மா இருந்தால் சிலந்தியும் உன்னை சிறைப் பிடிக்கும். எழுந்து நடந்தால் எரிமலையும் உனக்கு வழிகாட்டும் என்ற உணர்வு அலையை தன் மகனுக்கு அனுப்புகின்றார். உரம் பெற்று உண்மைக்கு சான்று பகரப் புறப்படுகின்றார் இயேசு.

**இயேசுவின் குரல்:**

- தாய்மார்களே நீங்கள் எங்களுக்கு கொடையாக கிடைத்த கண்கண்ட தெய்வங்கள். ஏன் தாய் என்னை வளர்த்தது போல உங்களது குழந்தைகளையும் நீங்கள் வளர்க்க வேண்டாமா?
- உங்களது குழந்தைகளை சுயநலமிக்கவர்களாக, குறுகிய மனப்பான்மையில் வளர்க்கின்றீர்களே?
- நீங்கள் பெற்ற குழந்தைகளை உதவாக்கறை, தெண்டச்சோறு, உருப்படாது என வடிக்கின்றீர்களே?
- ஏன் அவர்களுக்கு ஞானப்பால் கொடுத்து இறைவார்த்தையை ஊட்ட தயங்குகிறீர்கள்?
- உங்களது குழந்தையை திருச்சபையின் பணிக்காக அர்ப்பணிக்க, அதற்காய் ஊக்கப்படுத்தாது இருப்பது ஏன்?

*கடமையை செய்ய மறுக்கும் போது, கயவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்!*

**செபம்:** தாய் மரியே உம்மைப் போல நல்ல தாயாக விளங்கிட, முறையாக குழந்தைகளை வளர்த்திட மன்றாடும்.

## ஐந்தாம் நிலை

## இயேசுவின் பயணத்தில் சீமோன்

சுமைகளோடு வருகின்றவர்களின் சுமைகளை ஏற்றுக் கொண்டு, சில மணி நேரங்கள் சுமந்தவனுக்கு சுகத்தைக் கொடுத்து விட துடிப்பது தான் சுமை தாங்கியின் பணி.

ஆள் பாராது, நேரம் பாராது, பெருமை பாராது, சுமைகளைப் பாராது சுமந்து கொண்டே இருக்கும் சுமை தாங்கி.

யார் பெரியவர்? இது இன்று நேற்று உருவான கேள்வியல்ல. மாறாக உலகம் தோன்றியது முதல் உருவான கேள்வி. நல்லவர்கள், வலல்வர்கள், படித்தவாகள், பாரமரர்கள் எல்லார் மத்தியிலும் உருவான கேள்வியிது.

படித்தவர்களா, படிக்காதவர்களா பெரியவர்களா, வயதில் மூத்தவர்களா யார் பெரியவர்கள்?

இல்லறத்தில் இருப்பவர்களா, துறவறத்தில் இருப்பவர்களா?

ஆண்களா, பெண்களா யார் பெரியவர்கள்?

இயேசுவோடு உண்டு உறங்கி உறவாடிய சீடர்களின் வாழ்விலும் அவாகளுடைய எண்ணத்தில் கூட இந்த கேள்வி எழுந்தது. இயேசுவின் பதிலே அதற்கு, 'பணிவிடை புரிபவரே' என்றார். பிறரின் சுமைகளை சுமப்பவரே பெரியவர் என்றார் வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால். பிறரின் சுமைகளை சுமக்கும் போது நாமும் பெரியவர்களாகின்றோம். பிறருக்கு சுமையாகும் போது நாம் சிறியவர்களாகின்றோம். சிமியோன் இயேசுவின் சுமையை பகிர்ந்து கொள்ள வந்ததால் பெரியவர் ஆனார்.

நம்மிலே உண்மையிலே எத்தனை பேர் பெரியவர்கள்?

**இயேசுவின் குரல்**

- படிக்க கூடிய வயதில் குடும்பப் பொறுப்பை சுமக்கும் குழந்தைகள்?
- பொறுப்பற்ற பெற்றோரால் வறுமையில் வாடும் இளையோர், சிறியோர்?
- பட்டினி, பசியால் பலியாகும் பாமரர்களின் வாழ்வு பரிதாபமாகின்றதே?

*யார் பெரியவர் என்ற போட்டியில் முஷ்டியை உயர்த்தும் உனக்கும், அன்றைய கூட்டத்திற்கும் என்ன வித்தியாசம்*

**செபம்:** இயேசுவே நாங்கள் பிறரின் சுமைகளைச் சுமந்து சிமியோன் போல பெரியவர்களாக உம் பார்வையில் வாழ்ந்திட வரம் தாரும். ஆமென்

## ஆறாம் நிலை

## வீர மங்கையின் வீரச் செயல்!

கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டு படைப்பை ஆளும் ஆற்றல் பெற்றுள்ள மனிதர்களில் சரிபாதியாக பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பேண்கள் யார் என்பதற்கு ஒருவர் சொன்ன பதில் 'பெண்கள் ஒன்றுக்கும் பயன்படாதவர்கள், திறமையற்றவாகள், அடங்கிப் போகக்கூடியவர்கள், பேசத் தெரியாதவர்கள், துணிச்சல் இல்லாதவர்கள், வேலைக்காரர்கள்.' இவை உள்ளத்தில் ஊனப்பட்டவர்களின் வார்த்தைகளாகத் தான் இருக்க முடியும்.

"ஊனம் ஊனம் ஊனம் இங்கே ஊனம் யாருங்கோ,

உடம்பில் உள்ள ஊனம் ஊனம் இல்லிங்கோ"

என்று சொல்லி உடல் ஊனம் ஊனமில்லை. உள்ள ஊனமே ஊனம் என்ற தத்துவத்தை இன்றைய பெண்கள் வெளிக்காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். பெண்கள் பணியிடத்திலும், குடும்பத்திலும், சமூகத்திலும், அரசியலிலும், தொழில் துறைகளிலும், கல்வியிலும் இன்று சாதனைகளைச் சாதகமாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். 'பெண்கள் சக்தி தோற்றதில்லை' என்ற கூற்றுக் கேட்ப பெண்ணினம் வீறு கொண்டு சமுதாயத்தில் எழ ஆரம்பித்து விட்டது. வீர மங்கை வெரோணிக்கா இத்தகைய வாழ்வுக்கு வித்திட்டாள்.

பெண்ணினம் பணிந்து இருக்கும் வரைத் தான் உலகம் அவர்களை அடிமைப்படுத்தும், அவாகள் வீறு கொண்டு எழ ஆரம்பித்து விட்டாள் உலகம் அவர்களை கண்டு அஞ்சும். பேண் மாளப் பிறந்தவள் அல்ல, உலகை ஆளப் பிறந்தவள். சாதனைப் படைக்க பெண்ணினமே எழு! ஒளி! வீசு!

**இயேசுவின் குரல்**

- பெண்களே எப்பொழுது வெரோணிக்காவைப் போல எழுந்து சுடாவீசப் போகிறீர்கள்!
- வீட்டிற்குள் சின்னத் திரையில் முடங்கிப் போவதை எப்பொழுது மூட்டை ட்ட போகிறீர்கள்!
- முகம் இழந்து விலாசம் தொலைத்து நிற்போரின் முகம் துடைக்க தாயன்போடு தயாரா?

*இன்றும் அடிமைப்படுத்தி, அடிமைப்பட்டு கிடக்கும் உனக்கும் அந்த நாளின் சமூகத்திற்கும் என்ன வித்தியாசம்*

**செபம்**

இறைவா! நான் வாழுகின்ற தலத் திருச்சபையில், சமூகத்தில் வாழ வழி தெரியாது தவிக்கும் மக்களுக்கு உதவிட, அவர்கள் துயர் துடைத்திட மனவலிமையைத் தாரும். ஆமென்

## ஏழாம் நிலை

## மண்ணை மறுபடியும் மத்தம் செய்கிறார் இயேசு

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற முன்னோர்கள் கூறிய கூற்றுக்கு அர்த்தம் இப்பொழுது தான் புரிகின்றது. மீண்டும் ஒருமுறை இயேசு மண்ணிலே விழுகின்றார். அசுத்த ஆவிகளோடு போராட முடிந்த இயேசுவுக்கு, பரிசேயர்கள், சதுசேயர்களின் சதித்திட்டங்களுக்கு எதிராக போராட முடிந்த இயேசுவுக்கு, தன் சீடர்களின் புரிந்து கொள்ள முடியாத நிலையில் போராட முடிந்த இயேசுவுக்கு, எழுந்திரு இனிப் பாவம் செய்யதே என்று சொன்ன இயேசுவுக்கு தோளிலில் அழுத்தும் சிலுவையோடு போராட முடியாமல் கீழே விழுகின்றார். சிலுவை மட்டும் இயேசுவை அழுத்தியிருந்தால் விழுந்திருக்கமாட்டார். ஏனெனில் சுமைகள் அவருக்குச் சுகமானது தான். ஆனால் கூடவே இருந்து குழிப்பறித்த நம்பிக்கை துரோகிகளின் நன்றி கெட்ட சுமை அழுத்துவதனால் சோர்ந்து நிலை குலைந்து போய் விட்டார்.

இது இயேசுவுக்குத் தடங்கல் தானே ஓழிய அவரின் லட்சியத்துக்கு வெற்றிப் படிக்கல். ஏனெனில் அவர்கள் இயேசுவின் பாதங்களை மட்டும் தான் தகர்க்க முடிந்ததே தவிர அவரின் பாதையை மாற்ற முடியவில்லை. இயேசுவின் உடலை மட்டும் தான் உடைக்க முடிந்ததே ஒழிய உள்ளத்தை உடைக்க முடியவில்லை. ஏனெனில் லட்சியவாதிகள் வேண்டுமானால் அழிக்கப்படலாம். லட்சியங்கள் அழிவதில்லையே. விழுப்புண் இல்லாது வெற்றியும் இல்லை வேதனையில்லாது சாதனையும் இல்லை. சாதனையின் பாதையில் இயேசுவின் பயணம் மீண்டும் தொடர்கின்றது.

**இயேசுவின் குரல்**

- வேலையில்லாத திண்டாட்டம் வறுமை ஏழ்மை சாதிய பாகுப்பாடுகள் போன்ற சுமைகள் சுமத்தப்பட்டு வீழ்ந்து கிடக்கின்றாயா?
- உடன் இருந்து உயிரைக் கொடுப்பேன், என்று சொல்லி உன்னொடு உண்டு உறங்கி உறவாடிய உற்ற தோழன் நம்பிக்கை துரோகம் செய்து விட்டானே என்று கணத்த இதயத்தோடு விழுந்து கிடக்கின்றாயா?
- உடல் உள்ள நோய்களினாலே பாதிக்கப்பட்டு மற்றவர்களோடு சரியான முறையில் பேச முடியாமல் தனிமையை உணர்ந்து தவித்துக் கொண்டு இருக்கின்றாயா?
- வெற்றி கிடைக்கும் பதவி உயரும் குடும்ப பாரம் குறையும் என்று நினைத்த உனக்கு மீண்டும் குடும்ப சுமையா?
- கவலைப் படாதே கொடு உன் கரங்களை என் கரங்களோடு நான் எழுகின்றேன். நட என்னோடு நம் லட்சிய பயணம் ஒரு நாள் நிறைவேறும்.
-

*விழுந்தே கிடக்கும் மானிடரே, உனக்கும் அன்றைய சமூகத்திற்கும் என்ன வித்தியாசம்?*

**செபம்:** இயேசுவே நம்பிக்கை துரோகத்தினால் என்னை மீண்டும் மீண்டும் விழச் செய்கின்றவர்களை மன்னித்து அவர்களை அன்பு செய்யும் ஆற்றல் தாரும். ஆமென்.

# எட்டாம் நிலை

## ஆறுதல் கூறுகிறார் இயேசு

'துன்பப்படுகிறவர்களைப் பார்த்து பரிதாபப்படுவதும், கண்ணீர் விடுவதும் மட்டும் ஒருவருடைய துன்பத்தைத் துடைத்து விடாது. மாறாக ஆறுதல் மொழிகளும், தாங்குகின்ற கரங்களும் தான் தேவை' என்பார் அறிஞர் ஒருவர். இலாசர் இறந்து விட்டார் என்று கேள்விப்பட்டவுடன் பெத்தானியா சென்று இலாசருக்காக கண்ணீர் மட்டும் சிந்தவில்லை, மாறாக மார்த்தா மரியாவிற்கு ஆறுதல் சொன்னவர் இயேசு.

தொழுகைக்க கூடத் தலைவரின்மகள் இறந்த போது கண்ணீர் மட்டும் சிந்திய மனிதர்களை கடிந்து அனுப்பி விட்டு கரம் கொடுத்து மகளை எழுப்பி விட்டார் இயேசு. நயின் நகர் கைம்பெண்ணின் மகனுக்கு உயிர் கொடுத்து தாயிடம் கொடுத்தவர் இயேசு. இவ்வாறு பலருக்கு ஆறுதல் மொழிந்தவர்க்கு, பலரின் வாழ்வு முன்னேற கரம் கொடுப்பவர்ருக்கு ஆறுதல் தேவையா? இயேசுவுக்கு ஆறுதல் தேவையா? இயேசுவுக்காகக் கண்ணீர் வடிக்கின்ற எருசலேம் பெண்களைப் பார்த்து, 'எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும், உங்கள் குழந்தைகளுக்கும் அழுங்கள்' என்றார். இன்று நமக்காக நாம் கண்ணீர் சிந்த வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன.∴.

**இயேசுவின் குரல்**

- இளமையை மறந்துஇருளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உங்கள் இளவல்களுக்காக
- பெண்களை காட்சி பொருளாக்கி, கவர்ச்சிப் பொருளாக்கி உள்ள நிலைக்காக
- மாமியார், மருமகள் நிலையிலே உறவுகளை பிரித்து குடும்பங்களை சீரழிப்பதற்காக
- தவறான உறவுகளால் தடும்மாறி நிற்கின்ற நிலைக்காக
- பாசம், பண்பு அன்பு போய் காசு வேஷம் என கயமைத்தனத்தில் வாழும் நிலைக்காக

இது போன்ற நிலைக்காக அழுதிட வேண்டும்.

*ஆணவம் கொள்ளும் சமூகமே உனக்கும் அந்த எருசலேம் மகளிருக்கும் என்ன வித்தியாசம்*

**செபம்**

இறைவா! ஆறதல் மொழிகளையும், தாங்குகின்ற கரங்களையும் நாங்கள் பெற்று அதனை எங்கள் சமுதாயத்திற்கும் குடும்பத்திற்கும் கொடுத்திட வரம் அருள வேண்டுகின்றோம். ஆமென்.

## ஓன்பதாம் நிலை

## மனிதர்களுக்காக மடிய விழுகின்றார் மண்ணில்

மலைகளை முட்டிப்பார் அது உன் கண் முன்னே தூள் தூளாகும். இதயம் நிறைந்த நம்பிக்கை இருந்தால் இமயத்தை கூட தோளில் சுமக்கலாம் என்பர். இயேசுவின் கரங்களும், கால்களும் வலுவிழந்து தளர்ந்து நடக்க மறுக்கின்றதே ஒழிய அவரது இதயம் நம்பிக்கையினால் நிறைந்து நிற்கின்றது. கல்வாரி சிகரத்தை அடைவதற்கு. வெற்றியை ஒரே வீச்சில் அடைந்து விட முடியாது. முடியும் என்ற வார்த்தையை முடியும் வரையில் அசை போட்டுக் கொண்டு முன்னேறுகின்ற போது எந்த சிகரத்தையும், உளிதில் அடைந்து விடலாம்.

விழுந்த இயேசு விழுந்து கிடக்க விரும்பவில்லை. வாழ்வை இழந்த சமுதாயத்திற்கு வாழ்வு கொடுக்க பாவச் சேற்றில் உழன்று கொண்டு இருக்கிற பாவிகளுக்குப் பாச மழையை கொடுக்க தன் சக்தியை எல்லாம் ஒன்று கூட்டி எழுகின்றார் எரிமலையாக.

உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! என்ற இறைவார்த்தைக்கு உருகொடுக்க ஒளியாக மீண்டும் சுடர் விடுகின்றார்.

**இயேசுவின் குரல்**

- எத்தனை முறை விழுந்தாலும் எழுந்து எழுந்து நடக்கின்றேனே, நீங்கள் ஏன் இன்னும் பாவச் சேற்றினில் இருந்து எழ மனமில்லாமல் உழலுகின்றீர்கள்.
- உங்களிடம் தூய ஆவியின் கனிகள் கனிந்திருக்குமேயானால், நீங்கள் ஏன் பட்ட மரமாக கீழே விழ வேண்டும்.
- நீங்கள் பேசுகின்ற தீய வார்த்தைகள் அடுத்தவரைப் பற்றி கூறுகின்ற அவதூறும் உங்களையும் என்னையும் கீழே தள்ளுகின்றனவே.
- அவர்கள் என்மீது சுமத்திய சுமைகளை விட நீங்கள் நாள் தோறும் என் திருவிருந்தில் பங்கெடுத்து எனக்கெதிராக செய்கின்ற காரியங்கள் வாழ்க்கை முறைகள் தான் என்னை மண்ணோடு கலக்க வைக்கின்றன.
-

*பலன் கொடுக்க மறுக்கும் மனங்களுக்கும், அன்றைக்கு பாரத்தல் இயேசுவை கீழே விழச் செய்த அவர்களுக்கும் என்ன வித்தியாசம்*

**செபம்**

இயேசுவே எங்களது பாவங்களாலும், கோபத்தாலும் பேசிய வார்த்தைகளினாலும் உம்மை கீழே தள்ளியதற்காக மனம் வருந்துகின்றோம் மன்னித்து ஏற்றுக் கொள்ளும். ஆமென்

# பத்தாம் நிலை

# இயேசுவின் ஆடைகளை உரிகிறார்கள்

ஆள் பாதி ஆடைப் பாதி ன்று சொல்லுவார்கள். ஆனால் இங்கு இயேசுவின் ஆடைகளை மட்டும் அல்ல, ஆளின் பாதியையும் உரித்து விட்டார்கள். இயேசு முடக்குவாதமுற்றவர்களையும் தொழுநோயாளர்களையும் பார்வையற்றவர்களையும் பாவிகளையும் தொட்டு குணமாக்கியதால் என்னவோ தெரியவில்லை.இயேசுவின் கரங்களை சுட்டுத் துளையிளையிட்டு இருக்கின்றார்கள். இயேசுவின் உடைகளைக் கிழிப்பதாக நினைத்துக் கொண்டு அவரது சதையை கிழித்து இருக்கின்றார்கள். கொலைக்கார கும்பலுக்கு ‘நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே தேடி வந்தேன்’ என்று மொழிந்த பாமரன் இயேசு தேவையில்லையாம். உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை பார்க்காமல் உங்கள் சகோதர சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் பார்ப்பது ஏன் என்று முரசு கொட்டிய இயேசு தேவையில்லையாம். கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் என்று சொன்ன இயேசு தேவையில்லையாம். அவர் உடுத்தியிருந்த உடைமாத்திரம் தேவையாம்.

ஏன்? அவரது ஆடை மாத்திரம் தேவை. இயேசுவின் அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டது அந்தளவுக்கு மதிப்புக்குரியது.

இந்த உலகம் இன்றும் மனிதர்கள் உடுத்தி உள்ள உடையை வைத்து தான். ஒரவர் அணிந்துள்ள ஆடையை வைத்து தான் எபபடிப்பட்டவர் என்பதை எடை போடுகின்றத எனவே தான் நீதியின் இறைவாக்கினர் ஆமோஸ் உடைகளை அல்ல, உளள்ங்களை கிழிக்க நம்மை அழைக்கின்றார். இன்று நாம் நம்முடைய உள்ளங்களை கிழிப்பதற்கு பதிலாக இயேசுவின் உடைகளை கிழிக்கின்றோம். கிழிக்க வேண்டியது நம்முடைய உள்ளங்களை.

**இயேசுவின் குரல்**

- இன்று ஆடைகளை கொண்டு, ஆள் பார்த்து பேசும், மதிக்கும் மனநிலையினை உரித்து போடுங்கள்.
- சாதியின் பெயரால் சங்கங்களை அமைத்து, சமதர்மத்தை சிதைத்து ஏற்றத் தாழ்வுகளை பெற்றெடுக்கும் தீய எண்ணத்தை உரித்து போடுங்கள்.
- வீட்டிற்கு வாழ வருகின்ற பெண்ணை வரதட்சணை என்ற பெயரில் வதைக்கும் வக்கிர புத்தியை உரித்து போடுங்கள்.
- முகத்திற்கு முன் இனிமையாகவும், முகத்திற்குப் பின் கொடுமையாகவும் முரணாக பேசுகின்றதை உரித்துப் போடுங்கள், *இல்லையென்றால் என்னை உரித்தவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?*

**செபம்**

இறைவா எங்கள் வாழ்க்கையை சீர்தூக்கிப்பார்த்து சரி செய்வதற்கு பதிலாக, மற்றவர்களின் குறைகளை பெரிதுபடுத்தி அவர்களின் நன்மதிப்பை உரித்து போடுகின்றோம். மன்னித்து ஏற்றருளும். ஆமென்

## பதினொன்றாம் நிலை

## இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

பாரச் சிலுவையை தூக்க வைத்து அடித்து நொக்கிய இயேசுவின் உடைகளை கிழ்த்தோடு நின்று விடவில்லை சதிகாரர்களின் ஆத்திரம். மாறாக அவருக்கு பாடை கட்டுவதற்கு பரபரப்பு காட்டுகின்றார்கள். நல்லவாகளுக்கு உலகம் நஞ்சு கொடுத்து தான் வரவேற்கின்றது. நல்லவர்களையும், நாட்டுக்கு உழைத்தவர்களையும் வாசலில் நின்று வரவேற்பது அவலச் சாவு தான். நன்மைகளின் மொத்த உருவாம், சென்ற இடங்களில் எல்லாம் நன்மைகளை மட்டுமே பெசிய சிந்தித்த, செய்த இயேசு மட்டும் என்ன இதுக்கு விதிவிலக்கா? தொடும் என் கரங்களை, தொடும் என் கால்களை, தொடும் என் இதயத்தினை என்று இயேசுவை தொட கேட்கின்றோம்.

இயேசு கேட்கின்றார். நான் எப்படி தொடுவேன். பார்வையில்லாத மனிதனின் கண்களை தொட்டு பார்வை கொடுத்த என் கைகள் ஆணிகளால் அறையப்பட்டுள்ளனவே. ஆயக்காரர்களையும், பாவிகளையும் தேடிய என் கால்கள் இப்பொழுது ஆணிகளால் பிணைக்கப்பட்டுள்ளனவே. சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே என்று ஆறுதல் கொடுக்கும் என் இதயம் ஈட்டியால் குத்தி கிழிக்கப்பட்டு இருக்கின்றதே எப்படி தொடுவேன். நீயும் என்னை ஒவ்வொரு நாளும் சிலுவையில் அறைகின்றாயே?

**இயேசுவின் குரல்**

பணம் புகழ் பதவி இவற்றை பெரிதென கருதி பிறரை ஏமாற்றி துன்புறுத்தி வாழுகின்ற போது நீ என்னை ஆணிகளால் தானே அறைகின்றாய்.

வட்டியென்கின்ற பெயரிலே வருமானமாக வருவதையெல்லாம் வாங்கிக் கொண்டு, வயிற்றில் அடிக்கின்ற போது என்னைத் தானே ஆணிகளால் அறைகின்றாய்.

பத்து மாதம் சுமந்தவர்களை சுமைகளாக கருதி முதியோர் இல்லத்தில் விட்டு விட்டு உறவை இழக்கின்ற போது என்னை கொடூரமான ஆணிகளால் அறைகின்றாய்

அமைதியான குடும்பங்களில் குழப்பத்தை உண்டாக்கி அமைதிய இழந்து தவிப்பதை வேடிக்கைப் பார்த்து ரசிக்கும் போது என்னை பலமாக அறைகின்றாய்.

போதும் நிறுத்து நீ அறைகின்ற ஒவ்வொரு ஆணியையும் என்னால் தாங்க முடியவில்லை. கொஞ்சம் அணைக்கின்ற கரங்களை வளர்த்துக் கொள்.

*அரவணைக்க மறுக்கும் உனக்கும், ஆணிகளால் அறைந்தவர்களுக்கும் என்ன வித்தியாசம்*

**செபம்**

இயேசுவே சதிகார கும்பலைப் போல நானும் பல நேரங்களில் மற்றவர்களுக்குஎதிராக நான் செய்யும் செயல்களால், உன்னை சிலுவையில் அறைந்து கொண்டே இருக்கின்றேன் என் கரங்களை அணைக்கின்ற கரங்களாக மாற்றும்.

# பதினொன்றாம் நிலை

# இயேசு சிலுவையில் உயிர் விடுகின்றார்

வாழ்வு என்பது ஒரு அனுபவம் நாம் அதனை அனுபவிக்க வேண்டும்.

வாழ்வு ஒரு சுவை நாம் அதனை சுவைக்க வேண்டும் வாழ்வு ஒரு ரசனை அதனை நாம் ரசிக்க வேண்டும் என்பார்கள். அனுபவிக்க வேண்டிய சுவைக்க வேண்டிய ரசிக்க வேண்டிய இயேசுவின் வாழ்வு உதிர்ந்து விட்டது.

தாமரைப் பூவாய் தரணி முழுவதும் மலர வேண்டும் என்று மலர அழைத்த இயேசு வாழைப் பூவாய் தலை குனிந்து வாடி விட்டார். நற்கனி கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும் ஏ்னறு மொழிந்து நற்கனி கொடுத்துக் கொண்டிரந்த மரத்தை இங்கு வெட்டி விட்டார்கள்.

தந்தையே இவ்வுலகில் தங்களைத் தவிர தக்க துணை வேறு இல்லை. எனவே தாங்கள் தயைகூர்ந்து தங்களது திருவுள்ளத்தில் அடியேனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தந்தையிடம் தன் ஆவியை ஒப்படைக்கின்றார் இயேசு.

மனிதம் அலர்ந்திட வேண்டும். மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டும் என்று மனிதத்தை மண்ணில் மலரச் செய்வதற்கு கிடைத்த மகிமை இறப்பு. இயேசு இறந்த போது இருள் கவ்வியது. ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாக கிழிந்தது. நிலம் நடுங்கியது பாறைகள் வெடித்து சிதறின ஏன் ஏன்?

ஏழை எளிய மக்களுக்காக இயேசுவின் நெஞ்சத்தில் ஈரம் சுரந்ததனால் . . . சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்படட கைவிடப்பட்டவர்களின் கரங்களோடு தன் கரங்களை இணைத்ததனால் . . .

நீதி நேர்மை உண்மை அன்பு மன்னிப்பு போன்ற பண்புகளை தன் வாழ்வின் மார்பு கவசங்களாக அணிந்திருந்ததனால்

**இயேசுவின் குரல்**

- இந்த உலகில் வாழ்ந்து நீ மடிகின்ற போது இயற்கை வருந்துமா அல்லது மகிழுமா?
- உன்னோடு பயணித்த உன் உற்றார் உறவினர்கள் உன் இறப்பை பார்த்து கலங்குவார்களா அல்லது களிகூர்வார்களா?
- பக்கத்து வீட்டிலும் எதிர் வீட்டிலும் வாழ்ந்தவர்கள் உன் இறப்பு செய்தி கேட்டு இரக்கப்படுவார்களா அல்லது ஏளனம் செய்வார்களா?
- வாழ்வது ஒருமுறைத் தான் ஏன் வாழ்த்தக் கூடாது இந்த தலைமுறை இந்த உலகம் என்றும் நினைக்க என்னைப் போல மடியலாமே!

*மடிய மறுக்கும் உனக்கும், பிறர் மடிய செய்பவர்களுக்கும் என்ன வித்தியாசம்!*

**செபம்**

இறைவா! இச்சமுதாயத்தில் மற்றவர்களைக் கண்டு கொண்டு, அன்பு செய்து மன்னித்து ஏற்று வாழும் மனநிலையினை எமக்கருளும். ஆமென்.

# பதிமூன்றாம் நிலை

# தாயின் மடியில் தமையன்

பெற்ற வயிறு பற்றி எரிகிறதே, நீ நல்லாயிருப்பா? உன் குடும்பம் நல்லாயிருக்குமா? இது ஒவ்வொரு நாளும் பல தாய்மார்கள் தான் பெற்ற குழந்தையைப் பார்த்து, கடைசி காலங்களில் தன்னைச் சரியான முறையில் கவனித்துக் கொள்ளாமல் இருக்கும் தன்னுடைய பிள்ளைகளை நினைத்து வெளிப்படுத்துகின்ற உளள்க் குமுறல் இது. குமுறல்கள் ஒரு சிலருக்கு மட்டும் தானா?

2010 ஆண்டுகளுக்கு முன்புகூட ஒரு தாய் இறந்து போன மகனை தன் மடியில் வைத்துக் குமுறிக் கொண்டிருந்தார். தன் மகனை நினைத்து அல்ல. மாறாக குழந்தைகளையும், பிணியாளர்களையும் தொட்டு ஆசீர்வதித்து, இறையரசு உங்களுக்குரியதே என்று மொழிந்த மகனை மரக்கட்டையாய் மாற்றியவர்களை நினைத்து, எல்லா ஊர்களுக்கும், பட்டி தொட்டிகளுக்கும் சென்று ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவித்து, இறையரசை நிறுவி எல்லோருக்கும் விடுதலை கொடுத்த தன் மகனுக்கு பாடைக் கட்டிய பரிசேய, சதுசேய தலைமை குருக்களை எல்லாம் நினைத்து, செல்லுகின்ற இடங்களில் எல்லாம் நன்மைகளை மட்டுமே செய்து, பேசி, வாழப்பணித்த வல்லவரின் வாழ்வைப் பறித்தவர்களுளைக் குறித்து குமுறிக் கொண்டிருந்தார்.

ஆம் இறந்து போன பலருக்கு உயிர்ப் பிச்சை அளித்த உத்தமர் இயேசுவின் உயிரை உறிஞ்சியவர்களை நினைத்து அன்னை மரியா குமுறிக் கொண்டிருந்தார். அன்னை மரி நம்மையும் பார்த்து இன்று கேட்பது, ஏன் என் மகனை கொன்றீர்கள்? நான் பெற்று வளர்த்து ஆளாக்கிய என் மகனை திரும்ப எனக்கு தர முடியுமா? முகனை தரமுடியாத நீங்கள் எனக்கு மகனாக மாறுவீர்களா?

### மரியாவின் குரல்

- இறைவன் படைத்த இந்த அழகிய உலகத்தினைச் சீரமைக்க என் மகனாக மாறுவீர்களா?
- பாவச் சூழலில் மூழ்கும் இந்த உலகை வென்றெடுக்க என் ஊழியனாக மாறுவீர்களா?
- உண்மைக்காக உயிரைக் கொடுக்கும் உத்தமர்பளாக மாறுவீர்களா?
- நல்ல தாயன்பு கொண்டவர்களாக மாறுவீர்களா?
- 

*மரியாளின் மனநிலை பெற்றுக் கொள்ளாத உனக்கும், மரியாளை பகைக்கின்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்.*

### செபம்

அன்னை மரியே நாங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பிள்ளைகளாக வாழப் புறப்பட்டிருக்கின்றோம். எங்களை ஏற்றுக் கொள்ளும். ஆமென்

## பதினான்காம் நிலை

## இயேசுவின் உடல் கல்லரையில்

‘தடம் பார்த்து நடப்பவர்கள் மனிதர்கள், தடம் பதிப்பவர்கள் மாமனிதர்கள்.’

தன்னுடைய வாழ்வாலும் போதனைகளாலும், செயல்பாடுகளாலும் சரித்திரம் படைத்து இலட்சியப் பயணத்தில் வந்த இடையூறுகளை எல்லாம் விடாமுயற்சியோடு எதிர் நீச்சல் போட்டு வெற்றிகரமாக நிறைவேற்றி சமுதாயத்தில் தடம் பதித்து சாதனையாளராக கல்லரையில் அடக்கம் செய்யப்படுகின்றார் இயேசு. இவா நிகழ்த்திய சாதனைகள் தான்’ கொஞ்சமா? தூய ஆவியின் பல்லமையினால் கருத்தாங்கி மனிதனானது மண்ணில் சாதனையின் தொடக்கம்.

பன்னிரன்டு வயதில் எருசலேம் ஆலயத்தல் அறிஞர்கள் மத்தியில் அமர்ந்திருந்தது சாதனையின் மற்றொரு நிகழ்வு.

அன்பே தலைசிறந்த நெறி என்று உலகில் உள்ள எல்லா மக்களையும் அன்பு செய்து வாழ்ந்து காட்டி போதித்தது சாதனையின் வளர்ச்சி.

நோயாளிகளை குணமாக்கி உவமைகள் மற்றும் வல்ல செயல்க்ள வழியாக இறையரசை மக்கள் காண வைத்தது சாதனையின் எழுச்சி.

இறையரசு குழுமத்தை நிறுவி அதில் எல்லோரையும் இணைத்து தந்தையிடம் அழைத்துச் செல்வதற்கு சிலுவைச் சாவையும் ஏற்று மரித்து அடக்கம் செய்யப்பட்டது சாதனையின் முதிர்ச்சி

இவ்வாறு பல சாதனைகளின் காரரான இயேசுவை மண்ணில் புதைக்கின்றார்கள்.

சொர்க்க தங்கமான இயேசுவை மண்ணில் புதைத்து விட்டார்கள் மனிதர்கள்.

நம்மை பார்த்து இயேசு கேட்கும் கேள்வி

சரிந்து போய் கிடக்கும் சமுதாயத்தை நிமிர்த்தி நானிலத்திற்கு நன்மை செய்ய எப்பொழுது புறப்படப் போகின்றாய்? புறப்படு.

*விழிப்பில்லாத மாந்தர்களே உங்களுக்கும் படைத்தவரையே அடக்கிப் பார்க்க நினைத்தோருக்கும் என்ன வித்தியாசம்?*

**செபம்**

இறைவா! நானிலத்திற்கு நன்மைகள் செய்ய நாள்தோறும் எங்களைப் பக்குவப்படுத்திப் பயன்படுத்தும். ஆமென்.